40 ஆண்டுகளுக்குப் பிறகு

கனிமொழி ராஜாத்தி கருணாநிதியை சந்தித்த கழக முன்னோடி காசி!

சென்னை, நவ.6

தி.மு.க. துணைப் பொதுச் செயலாளரும், நாடாளுமன்றக் குழுத் தலைவருமான கனிமொழி ராஜாத்தி கருணாநிதி அவர்களை, கழகத்தின் மூத்த முன்னோடியும், மதுரை சோழவந்தானைச் சேர்ந்த விவசாயியுமான 82 வயது காசி நேற்று நேரில் சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.



தி.மு.க. தொடங்கப்பட்ட நாள் முதல் கழகத்தின் அடிப்படை உறுப்பினராகத் தொடர்ந்து பயணித்து வரும் காசி, மிசா காலத்தில் சிறைவாசம் அனுபவித்தவர். இந்தி எதிர்ப்புப் போராட்டம் உள்ளிட்ட கழகத்தின் பல்வேறு போராட்டங்களிலும் பங்கேற்றவர்.

இந்நிலையில், சென்னை சி.ஐ.டி. காலனியில் உள்ள கலைஞர் இல்லத்தில் கனிமொழி ராஜாத்தி கருணாநிதியைச் சந்தித்த அவருக்கு, கலைஞரின் திருவுருவச் சிலையை நினைவுப் பரிசாக வழங்கி சிறப்பித்தார் கனிமொழி.

அப்போது தனது பழைய நினைவுகளைப் பகிர்ந்து கொண்ட காசி, சுமார் 40 ஆண்டுகளுக்கு முன்பு இதே வீட்டில் உங்களைச் சந்தித்திருக்கிறேன். மதுரையில் நான் மூன்று பொதுக்கூட்டங்களை நடத்தியிருக்கிறேன் என்று கூறி, அந்தக் கூட்டங்களில் தீப்பொறி ஆறுமுகம் பங்கேற்ற புகைப்படத்தையும் காண்பித்தார்.

தொடர்ந்து பேசிய அவர், நான் ஐந்தாம் வகுப்பு வரைதான் படித்திருக்கிறேன். அதற்குப் பிறகு நான் பெற்ற அறிவெல்லாம் முரசொலி படித்ததன் மூலமாகக் கிடைத்ததுதான். நான் அதிகம் படிக்கவில்லை என்றாலும், எனது குடும்பத்தினர் அனைவரும் நல்ல கல்வியறிவு பெற்று உயர்ந்த நிலையை அடைந்துள்ள பெருமிதத்துடன் இன்று எனது தங்கையைச் சந்திக்க அழைத்து வந்திருக்கிறேன் என்று நெகிழ்ச்சியுடன் தெரிவித்தார்.

மேலும், பெரியாரைச் சோழவந்தான் பகுதிக்கு அழைத்து வந்து பொதுக்கூட்டம் நடத்தியதையும், அவர் அப்பகுதிக்கு வந்தபோது மாலை அணிவித்து வரவேற்றதையும் நினைவு கூர்ந்தார். பெரியாரின் நூல்களைப் படித்ததன் வாயிலாகவே தனது குடும்பத்தில் நிகழ்ந்த சாதி மறுப்புத் திருமணத்தை ஏற்றுக்கொண்டதாகவும் கூறினார்.

அதேபோல் 1951, 1952 காலகட்டத்தில் சோழவந்தான் தென்கரை திரையரங்கம் முன்பு நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் பெரியாரை நேரில் சந்தித்து அவரது உரையைக் கேட்ட அனுபவத்தையும் பகிர்ந்து கொண்டார்.

முன்னதாக இத்தனை ஆண்டுக்காலமாக கழகம் தொடர்பான பத்திரிகைச் செய்திகள், நிகழ்ச்சி விளம்பரங்கள், கணக்கு வழக்குக் குறிப்புகள் எனச் சிறிய துண்டுச் சீட்டுகளாக இருந்தாலும், அனைத்தையும் இன்று வரை பத்திரமாகச் சேகரித்து வைத்திருக்கிறார். அவற்றை எடுத்து வந்து கனிமொழியிடம் காண்பித்து மகிழ்ந்தார்.

அப்போது, தீப்பொறி ஆறுமுகம்தான் உங்களுக்குப் பிடித்தமான பேச்சாளரா என்று கனிமொழி கேட்டதற்கு, ஆமாம் என்று பதிலளித்த காசி, தான் சேகரித்து வைத்திருக்கும் புகைப்படங்களில் பெரும்பாலானவற்றில் தீப்பொறி ஆறுமுகம் இடம்பெற்றிருப்பதையும் சுட்டிக்காட்டினார்.

முரசொலி வழியே அறிவைப் பெற்று, பெரியாரின் கொள்கைகளை வாழ்வில் ஏற்று, கழகத்தின் வரலாற்றைத் தனது நினைவுகளிலும் ஆவணங்களிலும் பாதுகாத்து வரும் 82 வயது கழக முன்னோடி யின் சந்திப்பு நெகிழ்ச்சியூட்டும் நிகழ்வாக அமைந்தது.

கழக இளைஞர் அணியின் மண்டலம் - 2க்கு உட்பட்ட மாவட்ட - மாநகர அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம்!



கழக இளைஞர் அணியின் மண்டலம் 2-க்கு உட்பட்ட மாவட்ட- மாநகர அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம், 04.11.2026 அன்று காஞ்சிபுரம் மாவட்டம், புதுப்பட்டினத்தில் மாநிலத் துணைச் செயலாளர் ப.அப்துல் மாலிக் தலைமையில், பிரபு கஜேந்திரன் முன்னிலையில் நடைபெற்றது. கூட்டத்தில், காஞ்சிபுரம் தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் க.சுந்தர் பங்கேற்று, இளைஞர் அணியினருக்கு ஆலோசனைகளை வழங்கினார்.மேலும் இக்கூட்டத்தில், 'கழக இளைஞர் அணிச் செயலாளர் அவர்களின் 50-வது பிறந்தநாள் விழா', 'எதிர் வரவிருக்கும் இடைத்தேர்தல் பணிகள்', 'இளைஞர் அணியின் சமூக வலைதளச் செயல்பாடுகள்' மற்றும் 'இளைஞர் அணியின் ஆக்கப்பணிகள்' ஆகியவை குறித்து ஆலோசிக்கப்பட்டது. திருவள்ளூர், கடலூர், கள்ளக்குறிச்சி, விழுப்புரம் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த மாவட்ட - மாநகர அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் இக்கூட்டத்தில் பங்கேற்றனர்.

சைவ, வைணவ சமயங்கள் பற்றி பேச்சு;

முன்னாள் அமைச்சர் க.பொன்முடி வழக்கிலிருந்து விடுதலை!

ஜார்ஜ் டவுன் நீதிமன்றம் உத்தரவு!

சென்னை, நவ. 6 -

சைவ, வைண சமயங்கள் மற்றும் பெண்கள் குறித்து சர்ச்சை கருத்துகள் தெரிவித்ததாக முன்னாள் அமைச்சர் பொன்முடிக்கு எதிரான புகார் வாபஸ் பெறப்பட்டதை அடுத்து, வழக்கில் இருந்து அவரை விடுதலை செய்து சென்னை ஜார்ஜ் டவுன் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

சென்னையில் பெரியார் திராவிடர் கழகம் சார்பில் கடந்த 2025ம் ஆண்டு நடந்த கூட்டத்தில் பங்கேற்ற முன்னாள் அமைச்சர் பொன்முடி, சைவ, வைணவ சமயங்கள் மற்றும் பெண்கள் குறித்து பேசியது சர்ச்சையானது. இதற்கு பல் வேறு தரப்பினர் எதிர்ப்பு தெரிவித்த நிலையில் அமைச்சர் பதவியில் இருந்து பொன்முடி நீக்கப்பட்டார்.

இந்த சர்ச்சை பேச்சு தொடர்பாக, சென்னை சைதாப்பேட்டை நீதிமன்றத்தில் சென்னை மாநகராட்சி பாஜ மாமன்ற உறுப்பினர் உமா ஆனந்தன், பொன்முடிக்கு எதிராக வழக்குத் தொடர்ந்தார். அவரது மனுவில், மத ரீதியாக வெறுப்புணர்வை தூண்டுதல், மத உணர்வு



களை புண்படுத்துதல் ஆகிய பிரிவுகளின் கீழ் பொன்முடியை தண்டிக்க வேண்டும் என கூறி யிருந்தார்.

இந்த வழக்கு எம்.பி., எம்.எல்.ஏ.க்கள் மீதான வழக்குகளை விசாரிப்ப தற்காக அமைக்கப்பட்டுள்ள ஜார்ஜ்டவுன் நீதிமன்றத்துக்கு மாற்றப்பட்டது. வழக்கு நீதிபதி சி.சுந்தரபாண்டியன் முன்பு விசாரணைக்கு வந்த போது, புகார்தாரர் உமா ஆனந்தன் நேரில் ஆஜராகி, வழக்கை திரும்ப பெறுவ தாக கூறி மனு தாக்கல் செய் தார்.

அந்த மனுவில், தனது பேச்சுக்கு பொன்முடி பொதுவெளியில் மன்னிப்பு கோரியுள்ளார். அவரது வயது மற்றும் உடல் நிலையை கருத்தில் கொண்டு இந்த வழக்கை திரும்ப பெற்றுக்கொள்கி றேன். மன்னிப்பது தெய்வ செயல் என்பதால், யாரு டைய வற்புறுத்தலும் இல் லாமல் எந்த சமாதானமும் இல்லாமல், வழக்கை திரும்ப பெற்றுக் கொள்கி றேன். வழக்கில் இருந்து பொன்முடியை விடுவிப்ப தில் எந்த ஆட்சேபனையும் இல்லை என்று குறிப்பிட்டி ருந்தார்.

இதை ஏற்றுக் கொண்ட நீதிபதி, பொன்முடிக்கு எதி ரான குற்றச்சாட்டுகள் சந்தே கத்துக்கு இடமின்றி நிரூ பிக் கப்படவில்லை எனக்கூறி வழக்கில் இருந்து பொன்மு டியை விடுதலை செய்து தீர்ப் பளித்தார்.

